DUPLICATE
பதிவுப் பத்திரிகை
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதிஸு (1889)
ஆவணி மீ உஉ-உ
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

“எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு மான்ற பெருமை தரும்.”

பத்திராக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)

யாழ்ப்பாணப்பட்டினம்:	ஆ ௧-க்கு	ரூ. உ-௨-ஐ.
வெளியூர், இந்தியா:	,,	ரூ. ௩-௨-ஐ.
தொலைவாய்ப்பகுதி:	,,	ரூ. ௪-௭-ஐ.
தனிப்பிரதி	சதம்	-௰.

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
[illegible]	ஒருமுறை	௭-௫௰.
,,	[illegible]	௪-௰௰.
,,	[illegible]	உ-௫௰.
,,	ஒருவருஷம்	-௫௰.

[illegible]

புத்தகம் - ௩௰ { யாழ்ப்பாணம் — காலயுத்திஸு ஐப்பசிமீ கடுஉ; ககூகஅ-ம் ஆ அக்டோபர்மீ உகஉ. } இலக்கம் — சசு.

௨
கணபதி துணை.

சீர்பூத்த கருவிழ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மகக ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வதிவிச்சை கொழிலென் றேழு
மரம்பூத்த விகவகள்ளுவ வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

விலை சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்போனகம்பனி எது?

மதுரை மூ. க.
இராமையர் அன் சன்ஸ்.

எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ௪0 வருஷ காலமாக எங்கள் நேர் பார்வை யின்பேரில் கைதேர்ந்த நெசவுகாரர்களைக்கொண்டு பல தேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும் குடித்தனகாரர்களுக்கும் ஏராளமான தினுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான தினுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் தினுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூரா அறிந்த விஷயம். தவிரத் தற்கால நாகரீகத்திற்குத் தக்கபடி பலவூர் அநேகநூதன தினுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு நேரிலும், வி பி யிலும் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனேக் குடன் கவனித்து வி பி யில் அனுப்புவோம்.

F. M S. பெடரேடெட்மலாய்நாடுகளில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும் அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம் சிங்கப்பூர், பினாங்கு என்னும் இடங்களுக்கும் வி பி யில் அனுப்புவோம்.

எங்கள் ஜவுளி விபரம் விலை யாப்தா (Catalogue.) இனாமாக எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

மூ. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்.
மேலக் கோபுரவீதி
மதுரை.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பிதாரூ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீமூன்னிவிதை, சாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீங்கும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைறாத்தலுக்கு ரூபா ௧0. கால் றாத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
இல 96 மதல் மருதானை. கொழும்பு

பவளக்கொடிச்சேலை

மிகநேர்த்தியானது

16 முழநீளம்! உழைக்கத்தக்கது

இந்தச சேலைகள் வெள்ளை பளிங்கு சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லேட் நிற போல் பவளக்கொடிகள் போட்டுச் சுற்றிலும் சிறுகரை சட்டியிருக்கிறது. இது புதுமாதிரி இதுவரைக்கும் தயாரானதில்லை. இக்காலைத்துக்கு மிகவும் உபயோகமானது. இதை ஒவ்வொரு ஸ்திரீகளும் தரித்துக்கொண்டு அலங்கார பூஷிதர்களாய்ச் சந்தோஷப்படும்படி கனைவாழ்கப்புகின்றோம்.

சேலை ஒன்றுக்கு விலை ரூபாய் 4-3-0

பட்டுக்குட்டை.

5 முழநீளம் 2½ முழ அகலம் இதுமிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் பிரகாசிக்கும் இதில்பலவித நிறமுண்டு குட்டை 1-க்கு விலை 2-8 0 விலையை குறிப்பிட்டு எழுதவும். சிங்கப்பூர், செட்டால் முதலிய தூரதேசங்களுக்கு வி. பி யில் அனுப்பமுடியாது.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்.

கேசரஞ்சித தைலம்.

KESHRANJAN OIL
கேசரஞ்சன் தைலம்
கேசரஞ்சன் தைலம்

இந்தைலம் நான் உபயோகித்த தைலங்களில் மிகச்சிறந்தது” என்று கல்கத்தா நியாயப்பிரமாணகல்லூரித தலைமை ஆசிரியர் பரிஸ்தர் டக்தர் பாஜி எல். எல். டி. அவர்களும்,

“இத்தைலம் நறுமணமுள்ளது தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது” என்று டக்தர் பரிஸ்தர் எல். எம். மித்திரா எம். ஏ. எம், டி. அவர்களும்,

“தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதற்கு மிகச்சிறந்தது” என்று டக்தர் எம். என். பானேர்ஜி எம். டி. அவர்களும்,

“இது நல்ல கேசரஞ்சித தைலம் தலைக்குக் குளிர்ச்சியைத் தருகின்றது” என்று டக்தர் ஏஜ். என். கோஷ் எம். டி. அவர்களும்,

“இதிலும் அதிக நயத்தைக் கொடுக்கக்கூடிய தைலம் வேறில்லை” என்று டக்தர் யூ. மித்திரா எம். டி. எம். ஆர். ஏ. எஸ். எவ். சி. எஸ். அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

கேசரஞ்சிததைலம் விலை.

புட்டி 1 - க்கு ரூபா 1. தபாற்செலவின்றி ரூபா 1-8-5.

புட்டி 3-க்கு ரூபா 2-8-4. தபாற்செலவின்றி ரூபா 2-8-14

சித்தமகரத்துவாச.

சித்தமகரத்துவாச என்னும் ‘தொனிக்’ ஆயுள்வேத ஒளஷதங்களுள் மிகச்சிறந்தது. இது விலைபெற்ற மருந்து. ஏனெனில், இதில் தங்கம் சேர்ந்திருக்கின்றது. இது நெருப்புக்காய்ச்சல் முதலிய காய்ச்சல்களையும், நாட்பட்ட கழிச்சல் நோயையும், மேகச்சூட்டையும், பிரசவத்தின் பின் பெண்களுக்குண்டாகும்நோய்களையும், மண்டைப்பெலவீனத்தையும், ஞாபகக்குறைவையும், நரம்புத்தளர்ச்சியையும், கண், முகம், தோல் முதலான விடங்களிலுண்டாகும் வெளுப்புத் தோற்றத்தையும், நீரிழிவு, சோர்வாதம், குன்மம், வலி, க்ஷயரோகம் முதலிய நோய்களையும் இது அதிசயப்படக்கூடிய விதமாய்ப் போக்கடிக்கும்.

இதன் விலை தோலா 1-க்கு ரூபா 80. ஒருகிழமைக்கு உபயோகிக்கக்கூடிய மருந்து ரூபா 3.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய ‘கற்லக்கு’ கள் வேண்டியவர்களுக்கு இனாமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதியனுப்பித்தால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொடுவாய் இராச்சியம் முதலியஇடங்களுக்கு “பிறிஸ்கிறிப்ஷன்” (Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA.

சுதேச வைத்திய ரத்தினம்.

முன்பதிப்புகளைக்காட்டிலும் விரிவானது.

மூன்றாவதுபதிப்பு சித்திரப்படங்களுடன் கூடியது

இப்புத்தகத்தில் தினந்தோறும் நமது காலடியில் மிதிபடும் புல், செடி, கொடி, காய், கனி, பட்டை, சட்டை, வேர், இலை, பூ, பிசின், விதை முதலியவைகளைக் கொண்டும், நமது நாட்டுக் கடைகளில் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய கடைச்சரக்குகளைக்கொண்டும் வைத்தியர் உதவியின்றி, தங்களவர்களே குணமாகவும், பஸ்பமாகவும், செந்தூரமாகவும், மாத்திரையாகவும், காஷாயமாகவும், வடகமாகவும், மெழுகாகவும், லேகியமாகவும், திராவகமாகவும், களிம்பாகவும், பினாஸ்திரியாகவும் இந்திய ஆயுர்வேத முறைப்படியும், இங்கிலீஷ் வைத்திய முறைப்படியுஞ் செய்து, சாதாரண வியாதி முதல பெரிய வியாதியும் நாட்பட்ட திமைனைவைகளுக்கும், உபயோகிக்கவேண்டிய விதத்தையும் அளவையும், ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும் தமிழ், இங்கிலீஷ், லத்தின் முதலிய பாஷைகளிலுள்ள பல பெயர்களுடனும் விபரமாய் வரையப்பட்டிருக்கின்றது. இன்னும் இப்புத்தகத்தில் வியாதிகளை இலகுவாய்த் தெரிந்துகொள்ள “ரோக அட்டவணை”யும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் தமிழ் இங்கிலீஷ் பெயர்களுடனும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் உபயோகிக்கவேண்டிய ஒளஷதங்களும் எழுதப்பட்டிருக்கின்றது. சுருக்கச் சொல்லுமிடத்து தேக ஆரோக்கியத்தையும், நோயில்லா வாழ்வையும், சுகசெல்வங்களையும் அளிக்கக்கூடியபுத்தகம் இதுவேயன்றி வேறில்லை. 670 பக்கங்களுள்ளது. கலிகோ பைண்டு ரூபா 3 தபால் சார்ஜ் அணா 4. “பெதர் வெயிட்” என்னும் விலையுயர்ந்த பேப்பர் பதிப்பு கலிகோ பைண்டு ரூபா 3, அணா 8. தபால் சார்ஜ் அணா 5. சிங்கப்பூர் முதலிய அன்னிய நாடுகளுக்குத் தபாற் செலவு அணா 8.

“நமது சிறிய சந்துருக்கள்” அல்லது பிளேக், கலரா, மலேரியா முதலிய கொள்ளைநோய்களின் உற்பத்தி விபரமும், அவற்றிற்கான பரிகாரங்களும். தபாற்செலவுடன் அணா 8

மானுட ஜீவிய சிந்தாமணி அல்லது ஆண்மையின் அழிவும், அதனையகற்றும் விதமும். ஸ்டிப் பைண்டு ரூபா 2. கலிகோ பைண்டு ரூபா 3. தபாற்செலவு அணா 3. கோலாலம்பூர் முதலிய அந்நியநாடுகளுக்குத தபாற்செலவு அணா 6.

விலாசம்:—டாக்டர் எஸ். சந்திரசேகரர், கும்பகோணம்.

ஜவுளி விளம்பரம்.

சுதேசிஜவுளிகள் விலைசகாயமாய்க் கிடைக்குமிடம் எது?
மதுரை எம். ஆர் வெங்கடாசலநாயுடு அன்டு சன்ஸ் ஜவுளிகம்பனியில் வாங்கலாம்.

நமது கம்பெனியில் தற்கால நாகரீகத்துக்குத் தக்கபடி உள்ளூரில் புதுமாதிரியாகத் தயாராகும் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகை வேஷ்டி ஜோடிகள், சால்வைகள், சவுககங்கள், பலவித இங்கிலீஷ் கலரில் ஜரிகைச் சேலைகள், சாதா, டோரியா, சுன்னடி, சேலைகள் வகையராக்களும், சித்தாடை, ரவிக்கை தினிசுகளும், ஸ்ரீரங்கம், பரம்பாய், கல்கத்தா, டாகா, சூரத், காஷ்மீர், சாக்கிராடு, காஞ்சீபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னைபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, மங்களூர், உப்பாடை, தாமிசி, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து ஜவுளிகள் வரவழைக்கப்பட்டு ஸ்டாக்கில வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு வியாபாரத்துக்கும், சொந்தப்பாவிப்புக்காரர்களுக்கும், தேவையான நிவிசுகளை விரும்பிக் கேட்குமவண்ணம் ஜவுளிகளை சேரில் வருபவர்களுக்கும், பிறதேசவாசகன் வி. பி. மூலமாக அனுப்பும்படி எழுதுவோர்களுக்கும் அனுப்பிக்கொண்டு வருகிறோம.

தவிரவும், எங்கள் கம்பனியில், பட்டுகோணயத்திற்கும், ஜரிகைக்கும், உத்தரவாதமாயிருப்பதால் பிறதேசவாசிகள் நம்பிக்கையாக ஏராளமான ஜவுளிகளுக்கு ஆடர்கொடுத்துவருகிறார்கள். ஒருமுறை உண்மை சோதிப்பதற்காக எங்கள் விலைவிபர ஜாப்தா (Catalogue) வரவழைத்து சிறு ஆடர் கொடுத்து ஜவுளிகளின் சகாயத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

N. B. சிங்கப்பூர், பினாங்கு என்னுமிடங்களுக்கும் வி. பி. மூலமாகவும், மற்ற வி. பி. சட்டமில்லாத F. M. S என்ற பெடரேட், மலாய், தென் ஆபிரிக்கா முதலிய தொடுவாய் இராசியப்பகுதிகளுக்கு வி. பி. சட்டமில்லாததினால், ஆடருடன் முற்பணம் அல்லது போஸ்டல் ஆடராயத் அனுப்பவேண்டும். அல்லது பாங்கு மூலமாக அனுப்பவுங்கூடும்.

தமது ஆடரை எதிர்பார்க்கும்:
எம். ஆர். வெங்கிடாசலநாயுடு அன்டு சன்ஸ்,
நாகரீக ஜவுளி கம்பெனி,
மேலகோபுரவாசல்,
மதுரை.

M R V. NAIDU & Sons,
High Class Cloth Bazaar,
West Towe
Madra.

விளம்பரம்.

ஆனைக்கோட்டையில் வசிக்கும் கந்தர் சிவகுரு கைம்பெண் தங்கம்மாவாகிய நான் இதனால் சகல சொத்தாரிகமாருக்குந் தெரிவிப்பதுயாதெனில் இந்த 1918-ம் ஆண்டு அக்டோபர் மீ 9உ எனது புருஷன் கந்தர் சிவகுருவெனபவர் காலஞ்சென்றமையாலும், எனது பெண்குழந்தைகள் பராயமற்றவர்களா யிருப்பதினாலும் எனது புருஷனுக்கு உரிமையான கடன்களையும் ஆதன விஷயமான மற்றும் எவ்வகைக் கொடுக்கல்வாங்கல்களையும் எனது தாணி ஸ்ரீ. E முருகேசபிள்ளை காயிலாக கோட்டாரால இனிமேல நியமிக்கப்படும் தத்துவகாரன் மூலமாகத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்பதே.

ஆனைக்கோட்டை } இங்ஙனம்.
16-10-18 } சி. தங்கம்.

பத்திரக்கிரய வரவு.

ஸ்ரீ.	ரூ ச
,, V. சபாபதி, அளவெட்டி தெற்கு	3 25
,, இ. கு. சபாரத்தினம், திரிகோணமலை	1-00
,, க. வைத்தீசுவரஐயர், உடுவில்	1-50
,, அ. செல்லையா, விணலோ	2 50
,, மா. நாகலிங்கம், சுதுமலை	5-00

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: காலயுத்தி ஸ்ரீ ஐப்பசி மீ கஉ

பருத்திச்செய்கை விருத்தி.

உலகத்திலே எந்தச்சாதியத்தார் தமக்கு வேண்டிய உணவு உடையென்னும் இவற்றின் பொருட்டும் சீவனத்திற்கு இன்றியமையாத மற்றும் பொருட்கள் பொருட்டும் அந்நியதேசத்தை அன்றேல் அந்நிய சாதியாரை நம்பியிருக்கின்றார்களோ அவர்கள் ஒருகாலத் தில்லாவிடினும் இன்னொரு காலத்தில் பெரிதும் இடர்ப்பட வேண்டியவராவ ரென்பது உண்மையாகும். நிகழும் பெரிய யுத்தங் காரணமாக எழுந்த பஞ்சத்தினால் இங்குள்ளார் இப்பொழுது அனுபவிக்கும் கஷ்டமே இதற்குத் தக்க சான்றாகும். இலங்கையி லுள்ளவர்கள் உணவின் பொருட்டு இந்தியா, பெர்மா முதலிய தேசங்களையும் உடையின்பொருட்டு இந்தியாவையும் மேலைத்தேசங்களையும் இதுகாறும் பெரிதும் நம்பியிருந்தனர். இந்தியா பெர்மா முதலிய இடங்களிலிருந்து அரிசி நெல் இப்பொழுது இங்கே வாராமையால் அரிசி படியொன்று [illegible] சதவீதம் விலைப்பட நம்மவர்களுட் பெருந்தனவந்தர்களொழிந்த ஏனையோர் உணவின் பொருட்டு மிகவும் கஷ்டப்படுகின்றனர். அரிசி முன்னொருபோதும் இத்துணை விலையேறப்பெறவில்லை யென்று காலங்கண்ட விருத்தர் சொல்லுகின்றனர். முன்னமே இதனை யோசித்து நம்முடையநாட்டிலேயே செய்கைபண்ணப்படாத நிலங்களைச் செய்கைபண்ணி நெற்செய்கையை விருத்திபண்ணியிருந்தால் இத்துணைச் சங்கடத்திற்கு இப்பொழுது யாம் ஆளாகவேண்டிய ஏதுவில்லையாம்.

இனி எந்தநாடுகளிலிருந்து புடைவைகள் இங்கு தருவிக்கப்பட்டனவோ அந்த நாடுகளிலேயே புடைவைப் பஞ்ச முண்டாயிருப்பமைபற்றி இங்கு அவை நமது உபயோகத்திற்கு வேண்டிய அளவு அனுப்பப்படாமையால் யாம் புடைவையின் பொருட்டும் மிகவும் கஷ்டமுறலானோம். வஸ்திரக் கிரயமோ முன்னிருந்ததைக் காட்டிலும் மும்மடங்கு நான்மடங்கு விலை அதிகப்பட்டுவிட்டது. நமது தேசத்தில் ஏழைகளோ எண்ணிறந்தோர் வருஷமொருமுறை அரசினருக்குக் கொடுக்கும் தலைவரிப்பணமாகிய ஒன்றரை ரூபா, இரண்டு ரூபா என்னும் அற்ப தொகையை இறுக்க முடியாமல் ஊரைவிட்டு ஊர்தோறும் மறைந்து திரிவார் பலருளரென்னு முண்மையால் இங்குள்ள ஏழைகள் எத்தன்மையினரென்பது நன்குவிளங்கும் அன்னோர் முன்னரைக்காட்டிலும் மும்மடங்கு நான்மடங்கு கிரயங் கொடுத்துப் புடைவை வாங்கித் தரிப்பதென்றால் இலகுவில்முடிந்ததொன்றன்று. இவ்விலங்கையோ சகல வளங்களும் செழிப்புமுள்ள தீபகமெனப் பூர்வத்தில் இதனை விஜயஞ்செய்த சீன கிரேக்க பிரயாணிகளால் வியந்து கூறப்பெற்றது. இது நல்ல நிலவளமுள்ளது. சீதளத்திலும் உஷ்ணத்திலும் உண்டாகக்கூடிய தாவர வர்க்கங்க ளனைத்தும் இங்குண்டாகத்தக்கன இங்ஙனமிருப்பவும் நமது நாட்டிலுள்ளவர்கள் சீவனத்திற்கு இன்றியமையாப் பொருட்களை இங்கு செய்கைபண்ணி விருத்தியாக்காது இடர்ப்படுவது எத்துணைப் புத்தியீனம். புடைவைக்கு வேண்டியது நூல், நூலுக்கு வேண்டியது பஞ்சு பஞ்சைப் பெறுவது பருத்தியிலிருந்தே; இப்பருத்திச் செய்கையை இங்கே வேண்டியளவிற்கு விருத்தி செய்திருந்தால் இப்பொழுது வஸ்திரத்தின் பொருட்டு நாமதிகம் பஞ்சப்படவேண்டி வாராது. பருத்திச்செடி இலங்கையிற்பயிராகுமோவெனின்? ஆம்; அது இங்கே நன்கு பயிராகும். இப்பொழுதும் ஊவா மாகாணத்திற் சில பகுதிகளிலும் மாத்தளைப்பிரிவிற் சில இடங்களிலும் பருத்திச்செடி செய்கைபண்ணப்பட்டுப் பயிராகிக்கொண்டிருக்கின்றது அதை அது போதியதன்று. வடமாகாணம், கிழக்குமாகாணம், மத்தியமாகாணம், வடமத்தியமாகாணம், வடமேற்குமாகாணம் என்னும் இம்மாகாணங்களிற் பருத்திச்செடி நன்கு உண்டாகிப்பயிராகத்தக்க நிலங்களுண்டெனக் கிருஷித்தொழில் நிபுணர் கூறுகின்றனர் இம்மாகாணங்களுட் சிலவற்றில் தேயிலை, றப்பர், என்னுமிவைகளும் சில மாகாணங்களிற் புகையிலையும் பெரிதும் விருத்தி பண்ணப்படுகின்றனவே யன்றிப் பருத்திச் செடி செய்வாரைக் காணோம். தேயிலை, றப்பர் செய்கையினால் நமது நாட்டிலுள்ளார்க்கு அதிகம் நன்மையில்லையாகும். ஏனென்றால் அவை ஐரோப்பியரினால் நடாத்தப்படுகின்றன அவற்றின் பயனும் மேலைத் தேசத்திற்கே போகின்றது. இந்நாட்டு ஏழைச்சனங்கள் அங்கு கூலிவேலைசெய்து பிழைக்கலாமோ வென்றால் அதுவும் இயலாது இந்திய கூலிகளே முழுவதும் அத்தோட்டங்களில் நின்று கூலிவேலை செய்கின்றனர். நம்மவர்கள் சென்று கூலிவேலைசெய்து பிழைக்கில் என்னேவென வாராயில் ஏவல் கொள்ளும் ஐரோப்பியர் விதிக்கும் கடுநிபந்தனைகளும் கொடுக்கும் அற்பகூலியும் இந்திய கூலிச் சனங்கட்கன்றி நம்மவர்கட்கு ஏலா. இனி புகையிலைச் செய்கை வடமாகாணத்திற் சில வருடங்கட்குமுன்னர் அதிக பண வருவாயுதவியதென்பது மெய்யே. இந்திய அரசாங்கத்தார் செயலால் அத்தொழில் இப்பொழுது பணவருவாய் குறைதற்கு ஏதுவாயிற்று. சுருட்டிப்பிழைப்போர் சுருட்டு வியாபாரிகள் உழைப்பும் குறைவலாயிற்று. மேலும் புகையிலையின் உபயோகம் உணவுடைபோல் உலகத்தார்க்குஇன்றியமையாத தொன்றல்ல ஒருவர் சுருட்டுப்பிடித்தலும், தாம்பூலத்தோடேனும், தனியேயேனும் புகையிலையுண்பதும், பொடிப்போடுவதும் பெரும்பான்மைமுட்டின்றி யுண்டுடுத்த பின்பேயாம். புகையிலையை உண்பதினாலும் குடிப்பதினாலும் பசிதாகம் மாறப்போவதில்லை. புகையிலைச் செடியிலிருந்து பஞ்சு சேர்த்து, நூல் நூற்றுப் புடைவை செய்து உடுத்தலும் முடியாது. நாம் உணவு உடைக்கு முட்டின்றியிருத்தற்கு நெற்செய்கையும் பருத்திச்செய்கையுமேவேண்டும். உண்டாகக்கூடிய நிலங்களிலெல்லாம் பருத்திச்செடியை உண்டாக்கிப்பஞ்சுசேர்த்துக்கொண்டால் பஞ்சை நூலாக்கவும் நூலைப் புடைவையாக்கவும் இவ்விலங்கையிற் பலருளர். எந்தெந்தக் காலங்களில் எது எது ஆவசியகமோ அவற்றை அந்தந்தக் காலங்களிலேயே விருத்திசெய்தல் வேண்டும். இப்பொழுது காலம் மாறுபட்டுக்கொண்டது. சென்னையிலே சவர்க்காரஞ்செய்து இங்கிலாந்து முதலிய மேலைத்தேசத்திற்கு அனுப்பப்படுகின்றதென்று சமாச்சாரப் பத்திரங்கள்மூலமாய் அறிகின்றேம். நமது ஊரிலே சேணியர்களும், கைக்கோளரும், வள்ளுவகுலத்தாரும் நூல் நூற்றல் புடைவை நெசவுசெய்தல் முதலிய தொழில்களை முன்னர்ப் பெரிதுங் கைக்கொண்டு வந்தார்கள். அந்நியநாட்டுப் புடைவைகள் எவரும் விரும்பத் தகுந்த மாதிரியாகவும் மலிவாகவும் வந்து விலைப்பட்டமையால் இன்னோர் தமக்குக் கட்டாமைகண்டு அத்தொழிலைச் சிறிது கைநெகிழவிட்டனரேயன்றி வேறு காரணம்பற்றி யன்று இப்பொழுதும் பருத்திச்செடியைப் பயிரிட்டுப் பஞ்சை அதிகம் விருத்திபண்ணினால் இங்குள்ளோர்கள் நூல் நூற்றுப் புடைவைகள் நெய்யப் பின்னில்லார். முன் இத்தொழிலைச் செய்தார் மாத்திரம் இப்பொழுதுஞ் செய்ய வேண்டுமென்ற நியதியில்லை. பாவத் தொடர்பில்லாத தொழில் எதுவோ அதனை எச்சாதியாரும் எக்காலத்திலுஞ் செய்யலாமென்பதே விரிந்த மனமுடையார் அபிப்பிராயம். தொன்றுதொட்டுச் செய்துவரவில்லையேயென்பது சமாதானமல்ல. புகையிலைச் சுருட்டுத் தொழில் தொன்றுதொட்டதன்று. நெசவுத்தொழில் பாவமற்றதென்பதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவரு மதனைக் கைக்கொண்டாரென்பது 'இழைநக்கி நூல்நெருடும் ஏழையறிவேனோ, குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து'' என்னும் அவர் வாக்கினாலும் தொன்னூல்களாலும் ஐதிகத்தாலும் இனிது அறியத்தக்கது.

நூல்நூற்றலைப் பெண்களே பெரிதுஞ் செய்துவருவர்; நெசவுத் தொழிற்கும் பெண்கள் பெரிதுந் துணைபாவர். எனவே ஆண் பெண் இருபாலார்க்கும் இத்தொழில் பெரிதும் பயன் றருவதாகும். ஆனால் இத்தொழிலாளர்க்குத் தனவந்தராயுள்ளோர் திரவியசகாயஞ் செய்துதவுதல் வேண்டும். அங்ஙனஞ் செய்தலே தேசாபிமானம்பூண்ட தனவந்தர்கட் கழகாகும். இங்குள்ள தொழிலாளிகளுட் சிலர் இந்தியாவிலிருந்து வந்து இங்கே இறக்குமதியாகும் சேலைகள் போன்ற சேலைகளை நெசவு செய்வதைக் கண்டிருக்கிறோம். சரிகை யிழைகளை இடையிடையே விரவி வஸ்திரஞ் செய்யு மாற்றலும் இவர்களிடத்திற் காணப்படுகின்றது. சரிகை யிழைக்கும் பல்வகை வர்ணச் சாயங்கட்கும் பட்டிற்கும் நாம அந்நிய தேசத்தை எதிர்பார்த்திருக்க வேண்டுமென்ப துண்மையே ஆனால் மானத்தைக் காப்பதற்குச் சரிகைச் சேலையும் பட்டுவஸ்திரமும் அவசிய மல்ல, அவற்றைக் கிடைக்கக்கூடிய காலங்களில் ஆடம்பரத்தின் பொருட்டுப் பெற்று அணிந்துகொள்ளலாம்.

இனி, பருத்திச்செடி செய்கைபண்ணுவதற்குச் சிறிது சிரமம் வேண்டுமென்பதுண்மையே. நிலம் நன்கு பசளையிடப்படல்வேண்டும்; கவனமாகக் களைகட்டல் வேண்டும்; பூச்சிகள் விழுந்து செடியைப் பழுதுபடுத்தாவண்ணம் அவற்றை அகற்றத்தக்க பொருட்களை யுபயோகித்தல்வேண்டும்; அதிகமழையுள்ள இடம் நல்லதன்று; மழை குறைவான இடமே உத்தமமென்று கிருஷித் தொழில் வல்லோர் கூறுகின்றனர் இச்சிரமம் தேயிலை றப்பர் புகையிலை முதலிய செடிகளுக்கு வேண்டப்படாததல்ல அவற்றிற்குப்போல இதினும் அதிக சிரமமெடுத்தால் இது அவற்றைக் காட்டிலும் பெரும் பயன்றரும். அரசினரும இவ்விஷயத்திற் பேருதவி செய்தல்வேண்டும். அரசினருதவி உளதேல் எக்கருமமும் இலகுவில் அனுகூல மடையும் வஸ்திரப் பஞ்ச முற்ற இக்காலத்திலேயே இன்னோரன்ன தொழில்கள் பெரிதுஞ் சிந்தித்துச் செய்கற்பாலனவாகும். சுருங்கச் சொல்லுமிடத்தில் பருத்திச் செடியை இவ்விலங்கையிலே விருத்திபண்ணுவரின் இங்குள்ளார் எக்காலத்திலும் உடையின் பொருட்டு முட்டின்றி இனிது வாழ்வதுமன்றி அந்நிய நாடுகட்குப் பஞ்சையோ நூலையோ வஸ்திரத்தையோ வியாபாரத்தின் பொருட்டு அனுப்பி விக்கிரயஞ் செய்து அதிக பொருளீட்டி முட்டின்றிப் புகழோடு இனிது வாழ வல்லுநராவ ரென்பது திண்ணம.

சமாச்சாரம்.

கால நிலை:—இவ்வியாழ்ப்பாணப் பகுதியில் மழை சிலவிடங்களில் அதிகமாகவும் சிலவிடங்களில் அற்பமாகவும் பெய்துள்ளது. சிலவிடங்களில் இன்னும் மழை பெய்யவில்லையாம். ஐப்பசி மாதத்திற் பாதிசென்றும் மழை யின்மையால் சிலவிடங்களில இன்னும் விதைப்பு நடக்கவில்லை இப்பகுதியிலுள்ள கமக்காரர் இவ்வருஷம் நெல் விதைப்பார்களென்பது சந்தேகம். கமசெய்கை இவ்வருடம் வாய்க்குமென நாம் காத்திருக்கற் கேதுவில்லை. இங்கே சிலநாட்களாக வெய்யிலும் பனியும அதிகமாக விருக்கின்றது. நவீனசுரம் முன்னரைக் காட்டிலும இப்பொழுது குறைந்திருக்கின்றது. ஆனால் வயிற்றுளைவாற் பலர்பீடிக்கப்பட்டுவருந்துகின்றனர்.

அகவிலையேற்றம்:—அகவிலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டேவருகின்றது. ஒரு மூடை முத்துசம்பா 20 ரூபாவீதம் விலைப்படுகின்றது. ஒருபடியரிசியின் விலை 33 சதம். ஆனால் 9000 சாக்கு அரிசி அக்கியாப்பிலிருந்து இலங்கை நேற்று வந்திருக்கின்றது. றங்கூனிலிருந்து ஒரு கப்பல் 31009 சாக்கு அரிசி யேற்றிக்கொண்டுகொழும்புத் துறைமுகத்தில் வந்து சென்ற 25உ இறக்குமதி செய்திருக்கின்றது. இவைகாரணமாக ஒருபோது அரிசிவிலை சிறிது குறையுமெனக் காத்திருக்கலாம்.

புகைரதப் பிரயாணக் கிரயம்:—யுத்தநிமித்தமாகவெழுந்த மேலதிகமான செலவுகாரணமாக இலங்கைப் புகைரதப்பகுதியார் புகைரதப்பிரயாணக் கிரயத்தைப் பின்னரும் உயர்த்தும் நோக்கமாகவிருக்கின்றனர். வருகிற நவம்பர்மீ 1உ தொடக்கம் புகைரத முதல்வகுப்புப் பிரயாணிகளுக்கு 1 மைலுக்குப் 17 சதத்திற்கு மேற்படாத கிரயமும், இரண்டாம் மூன்றாம் வகுப்பினர்க்கு முறையே மைலுக்கு 8 சதம், 3 சதங்கட்கு மேற்படாத கிரயமும விதிக்கப்படுமாம்.

ஒரு புதிய பிறக்டர்:—வட்டுக்கோட்டை ஸ்ரீ. க. சிதம்பரநாதனவர்கள் சிலமாசங்கட்கு முன்னர் நிகழ்ந்த பிறக்டர் பரீட்சையிற் சித்தியெய்தினரென்பதைக் கேள்வியுற்று மிகவும் மகிழ்கின்றேம். இவர் தேசாபிமானம் சமயாபிமானம பெரிது முடையவர். தமிழறிவு முடையவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சில வருடங்களாக ஆசிரியராக விருந்தவர். யாழ்ப்பாணம் சரஸ்வதிவிலாசசபைக் காரியதரிசிகளுளொருவர். சாவித்திரி சரித்திரத்தை நாடகமாக எழுதியவர். இவர் தமது புதிய முயற்சியில் மிக்க அனுகூலமடையும்வண்ணம் திருவருள் முன்னிற்பதாக.

உணவுப்பொருட்களின் செய்கையை அதிகப்படுத்தல்:—நமது தேசத்திலே உணவுப்பொருட்களின் செய்கையை அதிகப்படுத்துவதற்கு இலங்கைக் கிருஷி உத்தியோகஸ்தர்களும் இலங்கைக் கிருஷிச் சங்கத்தாருமதிகமுயற்சி செய்துவருகிறார்கள். சென்ற வருடத்தைப் போல பலவித் தானியங்களும், கறிவித்துக்களும், காய்கறிவித்துக்களும் பலவிடங்களுக்கும் கிருஷிச் சங்கத்தாரால் அனுப்பப்பட்டிருக்கின்றன இன்னும் வேண்டிய வித்துகள் பூசாவிலிருந்து வருகின்றன. இவைகளும் ஆவலாக அனுப்பப்பட்டு வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்படும். முன் இங்கிலாந்திலும், அவுஸ்திரேலியாவிலுமிருந்தே பெரும்பாலும்வித்துக்களைத் தருவித்து இலங்கைக்கு கொடுக்கப்பட்டன, ஆனால் இம்முறை இந்தியாவிலிருந்தே வித்துக்களதிகமாக அழைத்துக் கொடுக்கப்படும். இவ் வித்துகள் வேண்டியவர்கள் கிருஷிச்சங்கவேலைகாரர்க்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். உணவுப்பொருட்களின் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டேவருகின்றது. இச்சமயத்தில் நாம் எவ்வெந்தஇடத்தில் எவ்வெந்த உணவுப்பொருட்களைச் செய்கைபண்ணலாமோ அந்தந்த இடங்களிலெல்லாம் தவறாது கூடியவரை செய்கைபண்ணிக்கொள்ளாவிட்டால் நாம் பசிபட்டினியால் வருந்தி மாளநேரிடுமென்பதை ஒவ்வொருவருமுணர்ந்துகொள்வது அத்தியாவசியகம்.

சென்னையிற் சவர்க்காரஞ் செய்தல்:—சென்னையில் அரசினர் முயற்சியால் சில வருடங்கட்கு முன் ஸ்தாபிதமான சவர்க்காரத் தொழிற்சாலை மேலும் மேலும் விருத்தியடைந்து வருகின்றது. இதற்குத் தலைவராக அரசினரால்நியமிக்கப்பெற்றவர் ஏ. கே. மேனன் என்பவர். இவர் இத்தொழிலில் மிகவும் நிபுணராம. இச்சவர்க்காரம சுத்தி செய்யுங்குணத்தில் சிறந்ததெனப் பலராற் புகழ்ந்து பேசப்பட்டுள்ளதாம். இது இப்பொழுது இந்தியாவில் மாத்திரமன்றி இங்கிலாந்து பலஸ்தைனின் முதலிய அன்னிய நாடுகளுக்கும் உபயோகத்தின்பொருட்டு அனுப்பப்படுகின்றதாம். சென்ற ஒருவருடத்திற்கிடையில் இத்தொழிற்சாலையதிபர் இதுவிஷயமாக 10362 கடிதங்களைப் பெற்றனரென்றும், 4899 பார்சல் அனுப்பியிருக்கின்றனரென்றும, ரூபா 38,000 லாபமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. நம்மவர்களும் இக்காலத்தில் சவர்க்காரமின்றி ஸ்நானஞ்செய்ய, வஸ்திரமொலிக்க அறியாதவரால இங்கும் அரசினரேனும் வேறுயாரேனும் ஒரு சவர்க்காரத் தொழிற்சாலையை ஸ்தாபித்து இத்தொழிலைவிருத்திசெய்யின் பெரும பணவருவாயுண்டாகுமன்றே. இச்சவர்க்காரத்திற்குப் பிரதானமாக வேண்டியது தேங்காயெண்ணெய். அது இலங்கையில் வேண்டியபடி கிடைக்கும், சவர்க்காரஞ் செய்ய வல்லுனர் சிலர் யாழ்ப்பாணத்தி லிருக்கின்றனர். அவர்கள் இதனைப் பிரயத்தனஞ் செய்தல் நன்மையாகும்.

தீபாவலி:—இது வருகிற சனிக்கிழமை நிகழும். புடைவை அதிகம் விலையேறியிருத்தலாலும், ஊரிற் பலர் நோய்வாய்ப்பட்டிருத்தலாலும் முன்போல் அத்துணைச்சிறப்பாக இத்தினம் இம்முறை கொண்டாடப்படமாட்டாதென நினைக்கின்றேம் இப்புண்ணியதினம விரதம்போல் நைட்டிகமாக அநுஷ்டிக்கவேண்டிய தொன்றேயன்றி உண்டாட்டுக்களியாட்டிற்காய தினமல்லவென்பதை இப்பத்திரவாயிலாகவே முன்னர்ப் பலமுறை தெரிவித்துள்ளேம். சைவ வைஷ்ணவாலயங்களில் எழுந்தருளிய மூர்த்திகட்கு இத்தினத்தில் புலரிகாலத்தில் எண்ணெய்க்காப்பு விசேட அபிடேகம் கோடிவஸ்திர தாரணம் விசேடபூசை முதலியன தவறாது செய்யப்படுதலாலும் இது ஒரு புண்ணியகாலமென்பது துணியப்படும். ஆதலால் சைவ வைஷ்ணவ சமயிகளுட் சிலர், மதுவுண்டு மாமிசம்புசித்து உண்டாட்டுக்களியாட்டயர்தல் அந்நிய சமயத்தாரைப் பின்பற்றிவந்தவோர் அநாகரிகமான பாவச்செயலென்பதை நன்கு சிந்தித்து அவற்றை யறவேயொழித்து இத்தினத்தில் விதிப்படி அப்பியங்கஸ்நானஞ்செய்துகோடிதரித்து,சுவாமிதரிசனஞ்செய்து தூயனவுண்டு இனிதொழுகக்கடவர். வஸ்திரதானஞ்செய்ய முன்னிற்கும பரோபகார புண்ணியசீலர்கள் இப்பொழுது அதனைச் செய்வரேல் ஏழைகளாயுளவர்கள வஸ்திரத்தைப் பெறுவதுடன் தங்கள் சமயானுஷ்டானத்தைத் தவறாது அனுஷ்டித்தலாகிய இருவகைப் பயனையுமடைவர். அதனால் வஸ்திரோபகாரிகளும் இருமடங்கு புண்ணியத்தையும் புகழையும பெறுவரல்லவா.

தேகவியோகம்:—இவ்விந்துசாதனப் பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ. பெ. கார்த்திகேய பிள்ளையவர்களின் சிரேஷ்ட புத்திரனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உபாத்திமைத் தராதலம் பெற்ற ஆசிரியருளொருவருமாகிய ஸ்ரீ. கந்தையா அவர்களின் பிரியபத்தினியும், யாழ்ப்பாணம் சுகாதாரப் பரிசோதகராகிய ஸ்ரீ. செல்லத்துரையவர்களின் கனிஷ்ட சகோதரியுமாகிய ஸ்ரீமதி பொன்னம்மா வென்னும் மாது சென்ற திங்கட்கிழமை, தம்மைப் பீடித்து வருத்திய நவீன சுரநோய் காரணமாக இவ்வுலகவாழ்வை யொருவினர். இப்பெண் கல்வியறிவு நாயகபக்தி முதலிய பொருந்தப்பெற்றவர். விவாகமாகிச் சிலவருடங்கட்கிடையில் தமது பிரியபத்தினியைக் காலன் வாய்ப்பறிகொடுத்துப் பெருந்துயருறும் ஸ்ரீ கந்தையா அவர்களுடனும், மாதுலனுடனும், சகோதரர்களுடனும், மற்றும பந்துமித்திரர்களுடனும் நாமும் பெரிது மனுதாபமுறுகின்றேம்.

ஒருவன் தன் மனைவியைக் கிணற்றில் வீழ்த்திக்கொன்றது:—டெமெற்றக்கொடைக்கணித்தாயுள்ள ஓர் கிராமத்தில் ஒருவன் குடித்து வெறித்துத் தன் மனைவியைக் கிணற்றில் வீழ்த்திக்கொன்றுவிட எத்தனித்து அவளைக் கிணற்றண்டை கொண்டு சென்றபோது அவள் சத்தமிட்டுத் தன் புருஷனை கட்டிப்பிடித்துக்கொண்டமையால் இருவரும் கிணற்றுள் வீழ்ந்தார்கள். ஆயின் புருஷன் நீந்தத்தெரிந்தவனானபடியால் தப்பிக்கொள்ள மனைவி இறந்துவிட்டனள்.

சைவசித்தாந்தம் போதித்தல்:—தேவிகோட்டையின் ஸ்ரீமாந். மெ. அரு. நா. இராமநாதஞ்செட்டியாரவர்கள், தமிழில் இலக்கிய இலக்கணம் பயின்றவராயும், சிவதீக்ஷைபெற்றுச் சைவாசாரமுடையவராயும் உள்ளவரிற் சிலர்க்குச் சைவசித்தாந்த சாத்திரம் போதித்து, அவர்வாயிலாகச் சைவசமய உண்மைகளை உலகத்திலே பிரகாசமாக்க வேண்டு மென்னும் பரோபகார சிந்தையுடையவராய், புரட்டாதிமீ 29உ யாகிய விஜயதசமி தினத்தில, சித்தாந்த சாத்திர வித்தியாரம்பஞ் செய்திருக்கின்றார். யாழ்ப்பாணம் வித்துவான் ஸ்ரீமத். சி. தாமோதரம்பிள்ளையவர்கள் போதகாசிரியராய் அமர்த்திருக்கிறார். கற்க விரும்பியவரில் ஏழைகளுக்கு உணவு முதலியனவும உதவுவார்கள். சைவசித்தாந்த விசாரஞ் செய்ய விரும்புவோர்க்கும், சைவசமயவிருத்தி

கும் இது நல்ல உபகாரச் செயலாம். யாழ்ப்பாணத்தவரிலும் சிலரைச் சேர்த்துக்கொள்வார்கள். விருப்பமுள்ளோர் டை செட்டியாரவர்களுக்காவது, வித்துவான் தாமோதரம்பிள்ளையவர்களுக்காவது எழுதிக்கொள்ளலாம். கடிதம்.

பஞ்சுப் பஞ்சத்திற்குக் காரணம்:—மிகத் தொகையான பஞ்சு யுத்தத்திற் செலவழிதலினால், வஸ்திரம் செய்தற்கு நூலும் நூல் நூற்றற்குப் பஞ்சும் அகப்படாதொழிய அதுவாயிலாகவே புடைவைகள் இத்துணை விலையேறப்பெற்றன வென லண்டன் நகரிலுள்ள ஒரு வியாபாரி தெரிவிக்கின்றனர். சிறிய யுத்தத்தில் 12 அங்குலத் துப்பாக்கிக்கு ஒருமுறை குண்டுப்பிரயோகஞ் செய்தற்கு 280 ருத்தல் பஞ்சு வேண்டுமாம். குண்டுப்பிரயோகஞ்செய்துகொண்டிருக்கிற ஒரு யந்திரத் துப்பாக்கிக்கு 3 நிமிஷத்திற் கொருமுறை 560 ருத்தல் பஞ்சு வேண்டுமாம். ஜுட்லண்டிக் கடற் கடல் யுத்தம்போல் ஒரு யுத்தம் நடக்கிறபொழுது ஒவ்வொரு யுத்தக்கப்பலும் ஒவ்வொருநிமிஷமும் தனித்தனி 5000தொடக்கம் 6000 ருத்தல் பஞ்சை உபயோகிக்கின்றனவாம். காயமுற்றோரைப் பரிகரித்தற்கு வருஷம் 20000 சிப்பம் பஞ்சு வேண்டுமாம். (560 ருத்தல் கொண்டது ஒரு சிப்பம்.) ஆகாயரதங்களுக்கு 100000 சிப்பம் பஞ்சு வேண்டுமாம். வெடிகுண்டுகள் செய்வதற்கு வருஷம் 1000000 சிப்பம் பஞ்சு வேண்டும். இங்ஙனமாயின் வஸ்திரம் விலையேறுவது நூதனமல்ல.

யானையின் நன்றியறிதல் — திருநெல்வேலியின் கண்ணே எழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீமத் நடராஜமூர்த்தியினது திருக்கோயிலின் கண் சுமார் 30 ஆண்டுகளாகச் சூரியப் பிம்பம்போன்ற யானை ஒன்றுளது. அந்த யானை எக்காலம் வந்ததோ அந்நாள் முதல் சோளமுத்து என்பவர் பாகராக இருந்துவந்தார். சிறிது, சென்ற ஓராண்டாகத் திலவேலர் முத்தணர்கட்கும் சோளமுத்து என்பவருக்கும் ஏதோ சில மனவருத்தங்கள் ஏற்பட்டதின் நிமித்தம் அந்த யானைப்பாகரை இரண்டு மூன்று தடவை அவ்வேலையினின்றும் நிறுத்திவிட்டனர். இதைக்கண்ட யானை தன் எஜமான் நின்றதின் பயனுக மிக இங்கலகன் அடையப்பெற்றது. பின்னர் கவர்ன்மெண்டாரவர்கள் அன்னவரையே மேற்படி யானையை ஓட்டும்படி திட்டம் செய்தார்கள். இது இவ்வாறிருக்க மறுபடியும் சச்சரவு ஏற்பட்டதால் சுமார் 1½ மாதகாலமாக அவர் யானை ஓட்டுவதினின்றும் நீக்கப்பட்டார். பிறகு சுமார் 25 வயதுள்ள மலையாள வாலிபர் ஒருவர் வந்து மேற்படி யானையைத் தம்வசமாகவே ஓட்டிக்கொண்டுவந்தார். அப்புதிய பாகர் யானையை ஈட்டியாலும் கட்டாரியாலும் குத்தியும், நீவர்த்திகளால் தேகத்தைப் பொசுக்கியும் இம்சை உண்டாக்கினார். இது இவ்வாறாக 3-10-18-ல் புது யானைப்பாகர் யானையின்மீது வீற்றிருந்தபடி தம வலுவைக்காட்டினார். சமயம் வாய்க்குமென்று எதிர்பார்த்திருந்த யானை ஆயிரக்கால மண்டபத்திலுள்ள ஒரு கற்றூணில் பாகனைச் சேர்த்து மோதிற்று. 5 நிமிஷத்திற்குள் ஐயோ அப்பா குட்யோ முறையோவென்று திடுதிடுத்து அலறிக் கீழே விழுந்து பிழைத்தேன் பிழைத்தேன் என்றோட்டம்பிடித்தார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த குசலேவல்புரியும் ராஜமாணிக்கமென்பவர் அதிதீவிரமாய்ச் சென்று யானையைக்கட்ட சங்கிலி எடுத்தார். யானை உடனே அவரைத் தும்பிக்கையினுல் எடுத்துச் சுற்றிக் கீழேதள்ளி அவர் முகத்தைக் கீழே எறிந்தது. அவரும் மூர்ச்சிக்கலாயினர். இவர் பிழைப்பது தெய்வ கடாக்ஷமே. இதைக்கண்ணுற்றவர்எல்லோரும்திகைத்துநின்றார்கள். யானை தன் இருப்பிடத்தை விட்டு அகலவில்லை. உடனே நீதிபதிகள் பொலிஸ்டேசனுக்கு யானையைச் சுட்டுவிடும்படி றிப்போர்ட்டுச் செய்தார்கள். டிப்டி கலெக்டரும் சப்மாஜிஸ்ரேட் அவர்களும் பொலிஸ் சார்ஜண்ட் இன்ஸ்பெக்டரவர்களும் டவுன் முனிசிபல் சேர்மன் அவர்களும் வந்து யானையைக் கண்ணுற்றார்கள். கூட்டம் அதிகம். அச்சமயம் ஆருத்ராதரிசனம் போல் காட்சியாயிருந்தது. உடனே யானையை உற்று நோக்கி அதனுடைய நற்செய்கைகளையும் மற்றவரை மக்களுக்குத் துன்பம் விளைக்காதிருந்த குணத்தையும் கண்டு ஆலோசத்துப் பழைய ஆனைப்பாகராகிய சோளமுத்து என்பவரை தஞ்சைசமாசாரிலிருந்து 6-10-18ஞாயிறன்று தருவித்தார்கள். சுமார் இரவு 7 மணிக்கு ஒருவருக்கும் கட்டுப்படாதிருந்தயானை கட்டுப்பட்டது. உடனே ஜனங்கள் யானையின் நன்றியறிவையும் சோளமுத்துவின் செய்கையையும்பற்றிப் புகழ்ந்து அவருக்கு அனேக பரிசுகளை யளித்தார்கள். இப்படியே பல தடவைகளில் சேரிட்டிருக்கின்றது. —திராவிடன்.

கனடாவில் ஆகாயரத மார்க்கமாகத் தபாற்போக்குவரவு:—கப்டின் பிறயன் பெக் என்பவர் முதன்முதல் மொன்றியல் என்னுமிடத்திலிருந்து ரொறன்ரோவுக்கு ஆகாயரதமார்க்கமாகத் தபால்கள் கொண்டுசென்றனர்.

* * *

தந்திச் சமாச்சாரம்.

(யுத்தசங்கதிகள்.)

(சிலோன் "அப்சேவர்" பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றன.)

அக்டோபர்மூ 17உ.

ஆங்கிலர் 'லீல' என்னுமிடத்திற் பிரவேசித்துவிட்டனர். டோய், ஸீப்ர்க் என்னுமிடங்கள் ஆங்கிலரால் பிடிக்கப்பட்டன.

ஆங்கில பெல்ஜிய பிரான்சிய சைனியங்கள் பல பிரதானமான இடங்களைப் பிடித்துப் பகைவருள்ளும் 1200 பேரைச் சிறைப்படுத்தின.

கெய்சர் சிமமாசனத்தை விடுத்தனர் என்னும் வதந்தி முற்றும் ஆதாரமற்றதெனச் சமாசாரம் ஜர்மனியிலிருந்து வந்திருக்கின்றது.

துருக்கியரும் பல்கேரியரைப் பின்பற்றி ஐக்கிய தத்துவ ராசியத்தாருடன் சமாதானஞ் செய்துகொள்ளாது தடுத்தற்பொருட்டு ஜர்மனியர் 20 யுத்தக்கப்பல்களைக் கருங்கடலிலிருந்து துருக்கிக் கனுப்பியிருக்கின்றனர்.

பெல்ஜியர் பாசாந்திலையத் தாண்டி ஒஸ்தென்ட் என்னுமிடத்தை நோக்கிச் செல்கின்றனர்.

பகைவர் மியூஸ் நதியோரமாக பெறூசல் வரை என்னுமிடங்கட்குப் பின்வாங்குகின்றனர். செப்டெம்பர் மாதம் 15-ந் தேதி தொடக்கம் அக்டோபர் மாசம் 12-ந் தேதி வரையில் ஆங்கில பிரான்சியர் பகைவருள் 90000 சைநிகரையும் 800 துப்பாக்கிகளையும் அகப்படுத்தினர். சேர்பியாவில் இப்பொழுது இரு அவுஸ்திரிய சைநியப் பிரிவும், 4 ஜர்மனிய சைநியப்பிரிவும் நின்று சமர்செய்கின்றன. வொன்சான்டஸ் என்னுஞ் சேனாபதியின் கீழ் 12000 துருக்கியர் அலெப்போ என்னுமிடத்திற் கூடியிருக்கின்றனர். பகைவர்களிடத்தில் 200 பிரிவு சைநியங்கள் உள்ளன. அவர்கள் 3 மாச காலத்துள் 300 000 சைநிகரையும், 4000 துப்பாக்கிகளையும் இழந்தனரேனும் இன்னும் அவர்கள் சைநியத்தைப் பிரிக்க முடியவில்லை. இன்னுஞ் சில மாசங்கட்கு ஜர்மனியர் நின்று சமர்செய்யத் தக்கவர்களாக இருக்கின்றனரெனச் சொல்லவேண்டியிருக்கின்றது. சேனைக் குறைவினுற் சமாதானம் பேசுகின்றனரென எண்ணவிடமில்லை.

வருகிற ஜூலாய் மாசத்திற்கிடையில் அமரிக்கர் இன்னும் 50,00,000 சைநியங்களை அனுப்புவார்களாம்.

அக்டோபர்மூ 18உ.

சென்ற 16உ தொடக்கமாகப் பெல்ஜிய அரசர் தமது சைநியத்துடன் ஜர்மனிபரைத் துரத்துகின்றனர். பெலஜியர் ஒஸ்தென்ட் நகருட் பிரவேசித்துவிட்டனர். பெல்ஜிய சைநியம் இப்பொழுது புறூஸ் என்னுமிடத்திற் கணித்தாய் நிற்கின்றது. பெல்ஜிய குதிரைச் சைநியம் ஒரு பிரதானமான இடத்தைப் பிடித்தது. பிரான்சியரும் 3 இடங்களைப் பிடித்தனர்.

ஆங்கிலர் லில் என்னுமிடத்திற்குத் தெற்குப் பக்கத்திலே சில இடத்தைப் பிடித்தனர்.

ஒயிசி நதியோரத்திலே பகைவர் தாக்கினர். பிரான்சியர் அசின் நதியைக் கடந்து சென்றனர்.

ஆங்கில பிரான்சியர் விளான்டஸ் பகுதியில் முன்னேறிச் செல்கின்றனர். இங்கே பகைவர்கள் அதிகம் எதிர்க்கவில்லை.

அக்டோபர்மூ 19உ.

ஆங்கில அமரிக்க சைநியம் பொகியன், லீசாற்றே என்னுமிடங்கட்கிடையே தாக்கியது. பகைவர் எதிர்த்துக் கடுஞ்சமர் புரிந்தபோது பிரான்சியர் அவர்களைப் புறங்கண்டனர். உவாசிக்னி, றிபோவில் என்னுமிடங்களைப் பிடித்து பெண்டு ஆங்கில பிரான்சியர் பகுல் என்னுமிடத்துட் பிரவேசித்தனர்.

பகைவருள் 1200 பேர் சிறைப்படுத்தப்பட்டனர். பகைவருள் 1200 பேர் சிறைப்படுத்தப்பட்டனர். பகைவர்கள் எதிர்த்தபோதும் 5 மைல் முன்னேறிச் சென்றனர். பெல்ஜியர் பகைவருள் 200 பேரைச் சிறைப்படுத்தினர். பெல்ஜிய குதிரைப்படை பகைவருள் 300 பேரைச் சிறைப்படுத்தியது. டோய் என்னும் பட்டினத்தை விட்டுப் போகும்போது ஜாமனியர் அந்த நகரை முற்றாய் விட்டுச் சென்றனராம். வேறெரு நகரிலும் இதிற்போல் அநியாயஞ்செய்யவில்லையாம்.

அவுஸ்திரிய மந்திரி கூறியது: "நாங்கள் யுத்தத்தில் அபஜெய மடைந்தோமென்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். ஆதலால் இப்பொழுது நாங்கள் செய்யவேண்டியது இயன்றவரையில் எங்கட்குச் சகாயமான ஒரு சமாதானத்தை ஒழுங்கு செய்துகொள்வதே".

அக்டோபர்மூ 20உ.

ஒயிசி, லீசாற்றே வென்னுமிடத்திற் கிடையில் 40 பிரிவு ஜாமன் சைநியம் நிற்கின்றன. பெலிசசோர்ட் சோறே என்னுமிடங்களையுஞ் சில சைநிகரையும் பிடித்தனர்.

பிறெசிடென்ற் உவில்சனவர்கள் அனுப்பிய சமாதான நிருபத்திற்கு ஜர்மனியர் இன்னும் பதிலெழுதவில்லையாம், காரணம்: ஜர்மனிய இராசாங்கத் தலைவர்கட்கிடையேயுள்ள அபிப்பிராய பேதமாம்.

ஜர்மனியருடைய சமாதான நிபந்தனைகள் சுவிற்சர்லண்டு அரசினர் மூலமாகப் பிறெசிடென்ற் உவில்சனுக்கு அனுப்பப்பட்டது. யுத்தத்தின் பொருட்டு ஜர்மனியர் சப்மெறயின் கப்பல்களைத் தடுக்கும் நோக்கமாக விருக்கின்றனராம்.

அவுஸ்திரிய விஷயம். அவுஸ்திரிய அரசர் முன்னிலையில் ஒரு விண்ணப்பப் பத்திரம் வாசிக்கப்பட்டது. அதனுட் சிலவாக்கியங்கள் வருமாறு: யுத்தத்திற் சம்பந்தப்பட்டதனுல் அவுஸ்திரிய அரசாங்கம் ஆபத்திலிருக்கின்றது. அவுஸ்திரிய ஹங்கேரிநாட்டிற்குப் பிறர்படையெடுத்து வரக்கூடுமாதலால் அந்நாட்டைக் காத்தற்பொருட்டு அந்நிய யுத்த முனையிலுள்ள அவுஸ்திரிய சைநியம் மனத்தும் சுயநாட்டிற்கு மீண்டு வருதல்வேண்டும். அங்குள்ள அந்நிய சைநியங்களை அகன்றுவிடல் வேண்டும். ஹங்கேரி தனரியிந்த இராச்சியமாக விருக்கவேண்டும். இதனைக் கெய்சர் அறிந்தபோது தான் ஒரு பொம்மையல்ல வென்றும், உலகம் முழுவதும் அச்சம் விளைக்கத் தன்னுலாகுமென்றும் கூறினராம்.

பிரான்சிய யுத்தமுனையில் ஆங்கிலர் பகைவர்களைப் பலமுறை புறங்கண்டு சில கிராமங்களையும் 2000 சைநிகரையும் அகப்படுத்தினர்.

அக்டோபர்மூ 21உ.

கடுஞ்சமர் செய்து அமர்ல் என்னுமிடத்தை ஆங்கிலர் பிடித்தனர். அதனைப் பகைவர் திருப்பிப் பிடிக்க முயன்றபோது துரத்தப்பட்டனர். கம்பிறேயிற் பகைவர் ஆங்கிலரைத் துரத்த முயன்றபோது அநுகூலமடைந்திலர்.

பெல்ஜியத்தில் ஜர்மனியர் பின்வாங்குகின்றனர். பெல்ஜியர் பல கிராமங்களைத் திருப்பிப் பிடித்தனர், அக்டோபர் 14உ வரையில் அவர்கள் 6209 சைநிகரையும் 169 துப்பாக்கிகளையும் அகப்படுத்தினர்.

பிரான்சியர் ஒயிசி, செறி என்னுமிடங்களில் முன்னேறிச் சென்றனர். றென்டலஸ் என்னுமிடத்தில் பகைவருக்குரிய 20 துப்பாக்கிகளை யகப்படுத்தினர்.

லீ-நூற்றே என்னுமிடத்தில் ஆங்கிலர் பிடித்த சைநிகரின் தொகை 3000.

பிறசிடன்ட் உவில்சனுக்கு ஜர்மனி அளித்த பதில்.

அக். 21

ஒரு தந்தியில்லா ஜர்மன் அறிக்கை:—பிறசிடன்ட் உவில்சனுக்கு ஜர்மனியால் கொடுக்கப்பட்ட பதிலாவது:—

கைவசப்படுத்தியிருக்கும் நாடுகளைக் காலி செய்யவேண்டுமென்னும் ஆலோசனையை அங்கீகரிக்கும்விஷயமாய், காலிசெய்யும் பிரவர்த்தனையும் யுத்தத்தை ஓய்வுபடுத்துவதற்குரிய காரியங்களும் இராணுவ ஆலோசனைக்காரரின் தீர்மானத்துக்கு விடப்படவேண்டியது. அவ்வேளையில் இருபக்கத்தார்களுக்கும் யுத்தகளத்தில் வைக்கப்படவேண்டிய சேனுபல அளவு அவைகளின் பாதுகாவலுக்கும் உத்தரவாதத்துக்கும் மூலாதாரமாயிருக்கவேண்டும். நடபடிக்கானவிபரங்களை உறுதிப்படுத்துவதற்கென ஒருதருணம் கிடைக்கப்படுத்தவேண்டுமென்று ஜர்மன் கவர்ன்மெண்டானது பிறசிடென்ட் உவில்சனுக்கு ஆலோசனை கூறுகின்றது. ஜர்மன் ஜனங்களுக்குப் பொருந்தாமலோ நியாயமான ஒரு சமாதானமுண்டுபடுவதற்கு விரோதமாயோவுள்ள கேள்விகளுக்கு பிறசிடன்ட் உவில்சன் சம்மதிக்கமாட்டார் என்று கவர்ன்மெண்டு நம்புகின்றது. தரையிலும் கடலிலும் ஜர்மனியர் நியாயவிரோதமாயும் இரக்கமற்றவிதமாயும் நடத்தினதாகச் சேனைகளுக்கு விரோதமாகவும் ஜர்மன் சனங்களுக்கு விரோதமாகவும் பழிசாற்றப்பட்டதை ஜர்மன் கவர்ன்மெண்டானது கண்டித்துப்பேசுகின்றது.

ஸ்தலங்களில் பின்னடைதலுக்கு உதவியாக அழிம்புகள் எப்போதுஞ்செய்யவேண்டியது அவசியப்படும். அதுவும் சர்வதேசசட்டம் எவ்வளவுக்கெல்லாம் இடங்கொடுக்குமோ அவ்வளவுக்கெல்லாம் நடத்தப்படும். ஜனங்களின் சொத்துச் சொத்துக்களைக் காப்பாற்றவும், தங்களால் இயன்ற அளவும் ஜனங்களைக் கவனிக்கவும் ஜர்மன் சைநியங்களுக்குக் கண்டிப்பான கட்டளைகள் கொடுபட்டிருக்கின்றது, அக்கட்டளைகளை மீறுவதானுல் அப்படிப்பட்டவர்களுக்குத் தண்டனை செய்யப்படுகிறது.

கப்பல்கள் அமிழ்த்தப்படுகிற விஷயமாய்ப் பிரயாணிகள் ஏற்றப்பட்ட ஜீவ ஊர்களைக் கப்பற்படை ஒருபோதும் வேண்டுமென்று அமிழ்த்தினதில்லை. இவ்வித குற்றங்களையும் உண்மைகளையும் நடுநிலைநிராசியத்து உத்தாரம்பெற்றவர்களால் விசாரிக்கப்படவேண்டுமென்று கவர்ன்மெண்டானது ஆலோசனை கூறுகின்றது. சமாதான நடபடிக்குத் தடையானவைகளைத் தவிர்க்கும்படியாக, பிரயாணக்கப்பல்களை தொப்பிடோவால் தாக்காதபடி சப்மறீன் தளபதிகள் எல்லாருக்கும் ஜர்மன் கவர்ன்மெண்டு ஒரு உத்தரவு அனுப்பியிருக்கின்றது. அப்படிக்கில்லாமல் சமுத்திரத்தில் ஒவ்வொரு தனித்த சப்மரீனிடமும் போய்க் கட்டளைகொடுப்பதற்கு உத்தரவாதமேற்பது கூடாதகாரியம்.

தனிப்படவும், அந்தரங்கமாகவும், தனியான ஒரே விருப்பத்தாலும் உலக சமாதானத்துக்கு தொந்தரவை யுண்டுபண்ணும் ஒவ்வொரு சுயேச்சையான தத்துவமும் அழிக்கப்படுமென்றும் சமாதான நடபடிக்கு ஒரு மூலாதாரமாக பிரசிடண்டு குறிப்பிடுகின்றார்.

இதற்கு ஜர்மன் கவர்ன்மெண்டு பதில்கூறுகின்றதாவது: ஜர்மன் ராஜாங்க அமைப்பில் இதுவரை பிரதிநிதித்துவம் செல்வாக்கினுல் அமைக்கப்படவில்லை. சமாதானவிஷயமாயும் யுத்தவிஷயமாயுமுள்ள தீர்மானங்களில் ஜனங்களின் ஒன்றுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கவேண்டுமென்பது இராசாங்க ஏற்பாடில்லை. இவ்வித காரியங்களெல்லாம் இப்போது பிரதான மாற்றமடைந்திருக்கிறது.

புதிய கவர்ன்மெண்டானது சமமாயும், எல்லோருக்கும் அமைந்த உரிமையை ஆதாரமாகக்கொண்டுள்ள ஜனங்களின் விருப்பங்களுக்கும் கொள்கைக்கும் தக்கதாயும் அமைக்கப்பட்டிருக்கிறது. றேஜ்ஸ்டாக்சபையிலுள்ள பெரியகட்சித் தலைவர்கள் இந்தராஜாங்கத்தில் அங்கத்தினராய் அமைந்திருக்கின்றனர். இனிமேல் றேஜ்ஸ்டாக் சபையிலுள்ள பிரதிநியாணபேரின் நம்பிக்கைக்கு மாறாக ராஜாங்கம் நிர்வகிப்பு நடாத்தக்கூடியதாயிராது.

ஜனங்களின் விருப்பங்களைவிட்டு ராஜ்யப் பிரதான மந்திரியின் உத்தரவாதமானது சட்டப்படியே விருத்திசெய்யப்பட்டுக் காப்பாற்றப்படுகின்றது. புதிய கவர்ன்மெண்டாரின் முதற்சட்டமானது ராஜாங்க அமைப்பை மாற்றி யுத்தவிஷயமாயும் சமாதானவிஷயமாயும் ஜனவிருப்பத்தை அறிவதின் பொருட்டாக றேஜ்ஸ்டாக் சபையில் சட்டமாக்கப்பட்டிருக்கிறது. இப் புதிய சட்டமானது ராஜாங்கப் பாதுகாவலால் மாத்திரமல்ல ஜர்மன் ஜனங்களின் அசைக்கப்படக்கூடாத தீர்மானத்தாலும் பொறுப்பாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சீர்திருத்தங்களுக்கு ஜர்மன் ஜனங்களின் பெருந்தொகையோர் சார்ந்து நின்று அவைகள் வேகமாய் நடக்குமாறு கேட்டுநிற்கின்றனர்.

ஆகையால் ஜர்மனிக்கு விரோதமாகப் பிறசிடெண்டும் கவர்ன்மெண்டாருஞ் சேர்ந்து கேட்டகேள்விகளுக்கு மாறுத்தாரமாக சுயேச்சையும் பொறுப்பற்ற செல்வாக்குமில்லாததும் ஜர்மன் ஜனங்களின் மிகஅதிகமான பேர்களின் அங்கீகார உதவி பெற்றதுமான கவர்மண்டாரிடமிருந்தே சமாதான கோரிக்கையும் யுத்தஓய்வு வேண்டுதலும் கேட்கப்பட்டதென்று இதனுல்தெளிவாய்க்கூறப்படுகிறது.

ஜனமித்திரன்.

சோமவாரவிரத மான்மியம்.

பூர்வகாலத்திலே, சகல வளங்களும் நிறைந்து விளங்கிய ஆரியவர்த்தம் என்னும் நாட்டிலே சித்திரவருமன் என்னும் பெயருடைய ஓர் அரசன் தன்னுயிர்போல் மன்னுயிரையுங் காத்துச் செங்கோல் செலுத்திவந்தான். அவ்வரசனுக்குப் பல புத்திரர் இருந்தனர். ஆனுல் தனக்கு ஒருபுத்திரி இல்லையே என்பதை எண்ணி அவன் மனம் சோர்ந்தான். கடவுளருளால் அவனுக்கு ஒருபுத்திரி பிறந்தாள். அவள் பிறந்ததும் அரசன் மிகவும் மனமகிழ்ந்து அப்பிள்ளைக்குச் சீமந்தினி எனநாமகரணஞ்செய்து தன் புரோகிதர்களை அழைத்துத் தனது மகளின் சாதகத்தைக் கணித்துப் பலன் சொல்லும்படி அவர்களுக்குக் கூறினன். அவர்களில் ஒரு புரோகிதன் சாதகம் கணித்த பின் அரசனை நோக்கி "அரசனே, உமது மகளின் சாதகபலனை நோக்குமிடத்து, இவள் கல்யாணத்தில் உமாதேவியையும், புத்திரபாக்கியத்தில் சசிதேவியையும், அழகில் தமயந்தியையும், குணத்தில் மகாலட்சுமியையும், கற்பிற் சாவித்திரியையும், கல்வியிற் கலைமகளையும் ஒத்தவளாய் நெடுங்காலம் கணவனுடு இன்புற்று இனிது வாழ்வாள்" என்றான். அரசன் அதனைக் கேட்டு எல்லையில்லாத சந்தோஷத்தை யடைந்திருக்கும்போது அங்கிருந்த மற்றுமோர் புரோகிதன் "அரசே, உமது மகள் பதினலாவயதில் அமங்கலையாவள்" என்றான். அதனைக்கேட்ட அரசன் இடியின் சத்தத்தைக் கேட்ட பாம்பைப் போலத் திடுக்குற்று நெட்டுயிர்த்துப் பின்னர் ஒருவாறு தேறி அப்புரோகிதர்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டு விதியை யாரால் விலக்கமுடியும்" என்று எண்ணி மகளின் பதினன்காம் வயதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

சீமந்தினியும் பூர்வபக்கத்துச் சந்திரன் போல் வளர்ந்து மங்கைப்பருவத்தை யடைந்தாள். ஒருநாள் அவளுடைய தோழியரில் ஒருத்தி அவளை நோக்கி "அரசகுமாரியே, நீ பதினலாம் வயதில் மங்கலியம் இழப்பாய் என ஒரு சோதிடர் சொல்லியிருக்கின்றார்; அதனை எண்ணுந்தோறும் என் மனம் புண்ணுகின்றது" என்றாள். அதனைக் கேட்ட சீமந்தினி மிகவும் துன்பமுற்றுச் சிறிது நேரம் யோசித்துப் பின்னர் யாக்ஞவல்க்கியர் என்னும் முனிவர் இருக்கும் பன்னசாலையை யடைந்து அவரது பத்தினியாகிய மயித்திரேயியின் கால்களில் விழுந்து வணங்கித் தனக்கு நேரப்போகும் ஆபத்தைச் சொல்லி அதனை நீக்கும் வழி யாதெனக் கேட்டாள். மயித்திரேயி அந்த அரசகுமாரியை எடுத்தணைத்து "மகளே, நீ ஒன்றற்கும் வருந்தவேண்டாம்; யான் சொல்லுகிறபடி செய்வாயாகில் உனக்கு ஒரு விபத்தும் வரமாட்டாது. விரதங்கள் எல்லாவற்றிலுஞ் சிறந்ததாகிய சோமவார விரதத்தை விதிப்படி அநுட்டிப்பாயாகில் உனக்கு நேரவிருக்கும் ஆபத்துச் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும்" என்றாள். அதனைக் கேட்ட சீமந்தினி எல்லையில்லாத ஆனந்தங்கொண்டு "தாயே, நீ கூறிய சோமவாரவிரத மகத்துவத்தையும், அதனை அநுட்டிக்கும் முறைமையையும் சிறியளாகிய எனக்குச் சொல்லுதல் வேண்டும்" எனக் கேட்டலும் மயித்திரேயி கூறுவாள்:

"மகளே, எல்லா விரதங்களிலும் சோமவார விரதமே சிறந்தது. அதிலும் சோமவாரத்திலே உதயந் தொடங்கி இரவிலே சடையாமம் வரையும் அமாவாசியிருப்பின் அது மூன்றுகோடி சிவராத்திரியை ஒக்கும். கார்த்திகை மாசத்திலேனும் மார்கழி மாசத்திலேனும் இரு அமாவாசை வருகின்ற மலமாசமொழிந்த மற்றும் எந்த மாசத்திலேனும் வரும் முதற் சோமவாரந் தொடங்கி இதனை அநுட்டித்தல்வேண்டும். அநுட்டிப்போர் முதனுளாகிய ஞாயிற்றுக்கிழமை யிரவு போசனஞ் செய்யாது சுத்தமான நிலத்திலே பாயின்றிப் படுத்துறங்கி, விடியற்காலத்தில் எழுந்து சிவபெருமானைத் தியானித்து நித்திய கருமங்களை முடித்து, காமம்முதலிய குற்றங்களை அடக்கி ஒரு தடாகத்தை அடைந்து கையிற் பவித்திரந் தரித்து, மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றும் ஒருப்பாடு பொருந்தச் சங்கற்பஞ் சொல்லிச் சிவபிரானைத் தியானித்து 'சுவாமீ, இப்பூமியின்கண்ணேயுள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஆடிய பலனை இங்கே தந்தருளல்வேண்டும்' என்று ஸ்நானஞ்செய்து தோய்த் துலர்ந்த வஸ்திரமிரண்டு தரித்து விபூதி உருத்திராக்கம் விதிப்படி அணிந்து, யாதும் இடையூறுவாராமைப் பொருட்டு முன்னர் விநாயகக்கடவுளைப்பூசித்தல் வேண்டும்; பின்னர் சங்கற்பஞ்சொல்லி, அக்கினியாகத்தில் மனத்தைச் செலுத்தி, உச்சிக்குமேற் பன்னிரண்டு விரலுயரத்தின்ன் துவாதசாந்தப் பொருளைத் தியானித்து, பிருதிவி தத்துவம் முதல் நாததத்துவம் வரையிலுமுள்ள தத்துவ சொருபமாய் விளங்கும் சிவலிங்கப் பெருமானை ஆசனமூர்த்தி மூலத்தினுலே பூசித்து, எண்ணெய்க் காப்பு, மாக் காப்பு, மஞ்சட் காப்பு, பஞ்சகௌவியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, நாரத்தம்பழச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம் பழச்சாறு, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், தேங்காய்த்துருவல், இளநீர், சந்தனக்குழம்பு, நவகடம் என்பவைகளாலே அபிஷேகஞ் செய்து திருவொற்றுடை சாத்தி, சந்தனம், கஸ்தூரி, புழுகு, பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, அட்சதை, அறுகு, வில்வம், வெள்ளெருக்கு, தாமரை, முல்லை, மல்

விசை, வெண்ணெருக்கு, வெண்டாமரை முதலிய வெண்ணிறப் பூக்கள், வெண்பட்டாடை இரத்தினாபரணம் என்னும் இவைகளைச் சாத்துதல் வேண்டும்; பஞ்சாட்சரத்தைப் பெண்பாலோர் இசைய உச்சரித்து உமாதேவியாரையும் இசைவதம் பூசித்தல்வேண்டும்; பின்னர் அன்னங்களும், கறிவகைகளும், பணியாரங்களும், பாயசமும் நிவேதித்து தாம்பூலமும் முகவாசமும் கொடுத்து, தூப தீபம் ஆனவுடன் குடை சாமரம் வெண்புடைவை ஆலவட்டம் என்பவற்றைக் காட்டி, சகல நாமஞ்சொல்லி விதிப்படி வந்தித்து வில்வத்திருவ அருச்சனைபண்ணி, 'சுவாமி! அடியேன் அறிந்தும் அறியாமலுஞ் செய்த குற்றங்கள் எல்லாவற்றையும் பொறுத்தருளுக' என்று விண்ணப்பஞ் செய்து மும்முறை வலம் வந்து வணங்கித் துதித்து விரும்பிய வரங்களை அருளும்படி இரந்திருத்தல்வேண்டும்.

பூசைக்கு அருகரல்லாதவர் பொருள் கொடுத்து சிவப்பிராமணரைக்கொண்டு இப்புண்ணிய தினத்திலே சிவபிரானை விதிப்படி பூசை செய்வித்தல்வேண்டும்.

இவ்விரத தினத்திலே சிவபெருமானுடைய சந்நிதியிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், அலங்கரித்தல், தூபமிடுதல், நெய்விளக்கேற்றல், மாவிளக்கிடுதல் முதலிய சிவதொண்டுகளைச் செய்வோர் எல்லாப் பாவங்களும் நீங்கப்பெற்று முத்தியடைவர்.

அரசிளங்குமரியே, இனி இவ்விரதத்தின் வகையைச் சொல்லுகின்றேன் கேட்குதி: இவ்விரதம் ஐந்து வகைப்படும். அவையாவன: பகற்பொழுதிலே உண்ணுதல், இரவிலே உண்ணுதல், உபவாசமாயிருத்தல், நித்திரைசெய்யாதிருத்தல், நான்கு யாமமுஞ் சிவபூசைசெய்தல் என்பவைகளாம். இவ்வைந்தும் ஒன்றற்கொன்று விசேடமாகும். இவற்றுள் முதல் வகைப்படி அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் பிராதக்கால சந்தியும் மத்தியான சந்தியும் முடித்துக்கொண்டு சிவபூசையும் சிவதரிசனமுஞ்செய்து பகலிலே பதினைந்து நாழிகைக்கு மேல் மாகேசுரபூசைசெய்து சுற்றத்தாருடன் போசனஞ் செய்தல் வேண்டும். இரண்டாம் வகைப்படி அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் பிராதக்கால மத்தியான சாயங்கால சந்திகளை முடித்துக்கொண்டு சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ்செய்து போசனஞ் செய்தல்வேண்டும். மூன்றாம் வகைப்படி அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்திகளையும் முடித்துச் சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ் செய்து உபவாசமாகத் துயின்று மற்றை நாட் காலையில் இரண்டு சந்தியும் முடித்து, சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ் செய்து மாகேசுரபூசை பண்ணிச் சுற்றத்தாரோடும் பாரணம் பண்ணல் வேண்டும். நான்காம் வகை அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்தியும் முடித்துச் சிவபூசையும் சிவதரிசனமுஞ் செய்து ஊணுறக்கமின்றி யாமந்தோறும் அர்ச்சியாகஞ் செய்து மற்றைநாட் காலையில் இரண்டு சந்தியும் முடித்து, சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ் செய்து பாரணம்பண்ணல் வேண்டும். ஐந்தாம் வகை அநுட்டிக்கச் சங்கற்பித்தோர் மூன்று சந்திகளையும் முடித்து, சிவபூசையுஞ் சிவதரிசனமுஞ்செய்து ஊணுறக்கமின்றி யாமந்தோறும் சிவபூசைசெய்து மற்றைநாட் காலையில் இரண்டு சந்தியும் முடித்துப் பாரணம் பண்ணல்வேண்டும். பாரணஞ் செய்தபின் பகலில் நித்திரை செய்யாது சிவபுராணங்களைப் படித்துக்கொண்டேனும் கேட்டுக்கொண்டேனும் காலங்கழித்தல் வேண்டும். பாரணம் பண்ணிய அப்பகலில் நித்திரை செய்தவர் நூறு சற்பிராமணரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தை யடைவர். இந்த ஐவகையையும் எந்த வகைப்படி அநுட்டிக்கச் சங்கற்பித்தனரோ அந்த வகைப்படியே தவறாமல் அநுட்டித்தல் வேண்டும்.

இவ்விரதம் நோற்கவேண்டிய காலம்: ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடம், பன்னிரண்டு வருடம், வாழ்நாளெல்லை என்பனவாம். விரதத்தைத் தொடங்கும்போது தாம் அநுட்டிக்கத் தொடங்கிய கால வெல்லையைக் குறித்துக்கொண்டே சங்கற்பித்தல் வேண்டும். சங்கற்பித்த எல்லை முடிவில் விதிப்படி உத்தியாபனம் பண்ணல் வேண்டும். வாணாளெல்லை வரையும் அநுட்டிப்போர் உத்தியாபனஞ் செய்ய வேண்டியதில்லை. விரதத்தை இடையே விடுவோரும், உத்தியாபனஞ் செய்யாதோரும் அவ்விரத பலனை அடையமாட்டார்கள். ஆதலின் விரதத்தை இடையில் விடாது விதிப்படி அநுட்டித்து முடிவில் உத்தியாபனஞ் செய்தல்வேண்டும்.

மகளே, இனி இவ்விரத உத்தியாபன விதானஞ் சொல்லுகின்றேன் கேட்குதி: வெள்ளியினாலேனும் செம்பினாலேனும் சிவபிரானது திருவுருவையும் தேவியினது திருவுருவையும் சிற்பநூலில் வல்ல சிற்பியைக்கொண்டு செய்வித்தல் வேண்டும். திருவுருவுக்கு முப்பது கழஞ்சு உத்தமம், இருபது கழஞ்சு மத்திமம், பத்துக் கழஞ்சு அதமம். சிவபிரானது திருவுரு ஒரு முகமும், மூன்று கண்களும், நான்கு புயங்களும், நான்கு கைகளில் மான் மழு அபய வரதங்களும், முடியிலே பிறையும் உடையதாகச் செய்வித்தல் வேண்டும். தேவியின் திருவுரு ஒரு முகமும், இரு தோள்களும், வலக்கை செங்கழுநீர் பிடித்ததாகவும், இடக்கை கீழே தூங்குகின்றதாகவும் செய்வித்தல்வேண்டும். யாகமண்டபமும் அதிலே குண்டமண்டல வேதிகைகளும் விதிப்படி செய்வித்தல் வேண்டும். ஞாயிற்றுக்கிழமையில் ஒருபொழுது போசனஞ்செய்து இரவில் உணவின்றிச் சுத்தமான நிலத்திற் படுத்துறங்கி அடுத்த தினமாகிய சோமவாரத்தின் வைகறையில் எழுந்து நித்தியகருமம் முடித்து மத்தியானம் தொடங்கிச் சாயங்காலம் வரையும் சிவபுராணம் படித்து அல்லது கேட்டு, சாயங்காலந்தொடங்கி நான்கு யாமமும் மண்டபத்திலும், குண்டத்திலும், சிவலிங்கத்திலும் சிவபிரானைப் பூசைபண்ணுதல் வேண்டும். சந்நிதியிலே திருவுருக்களையும் வைத்துப் பூசைபண்ணுதல் வேண்டும். அவ்வப் பூசை முடிவிலே சிவமூலமந்திரத்தினாலே யாமந்தோறும் நூற்றெட்டாகுதிபண்ணுதல்வேண்டும்; ஆயிரம் நாமஞ் சொல்லி ஆயிரம் வில்வஞ் சாத்துதல்வேண்டும்; பஞ்சாக்கரத்தினாலே அருக்கியங் கொடுத்தல்வேண்டும்; மூலமந்திரத்தினாலும் மந்திரங்களினாலும் அக்கினியை வளர்த்துப் பூர்ணாகுதி செய்து வேள்வியை முடித்தல் வேண்டும். விடிந்த பின்னர் நித்தியகருமங்களை முடித்துப் பதின்மூன்று வாழையிலைகளின்மேல் அரிசியையும் காய் கறிகளையும் பரப்பி பசுவின் பால் நிறைந்த பதின்மூன்று குடங்களை வெள்ளை வஸ்திரங்களினால் அலங்கரித்து அந்த அரிசிமேல் வைத்து, சிவார்ச்சனைக்குரிய சிவப்பிராமணர்களை வரித்து, காசணியும் மோதிரமுங் கொடுத்து, சிவனாகப் பாவித்துப் பூசித்து, தக்கிணையுடன் வெண்ணிறப் பசு, பாதுகை, விசிறி, குடை, கமண்டலம் முதலியனவற்றைத் தானஞ் செய்தல்வேண்டும். பின்பு குருவை அவர்பத்தினியோடும் ஆசனத்தில் இருத்தி அவ்விருவரையும் முறையே சிவபிரானாகவும் உமாதேவியாராகவும் பாவித்து, அவர்களைப் பட்டுவஸ்திரம் ஆபரணம் முதலியவற்றால் அலங்கரித்து, பூக்கொண்டு பூசித்து, சிவபெருமானையும் உமாதேவியாரையும் ஆவாகித்துப் பூசைசெய்த வெள்ளியாலாய திருவுருவையும், பொன், பூமி, பசு முதலியவற்றையுந் தானஞ்செய்தல்வேண்டும். இவ்வாறு உத்தியாபனம் முடித்துக் குருவினது அநுமதியுடன் சிவனடியார்களோடும் சுற்றத்தவர்களோடும் போசனஞ்செய்தல் வேண்டும்.

மன்னவன் மகளே. இன்னுமொன்றுரைப்பேன் இனிது கேட்டி. இச்சோமவார விரதத்தை அநுட்டிப்பவர், பகை பழி மனக்கவலை வறுமை முதலியன நீங்கி முற்பிறவிகடோறும் செய்த பாவங்கள் ஒழியப்பெற்று இம்மையிற் சகல போகங்களையும் அநுபவித்து மறுமையிற் சிவகதியடைவர். இவ்விரதத்தைப் பூர்வத்தில் விஷ்ணுவும் பிரமாவும் இந்திரனும் சந்திரனும் அநுட்டித்து மேன்மையடைந்தார்கள். மேலும், இவ்விரதத்தை அநுட்டித்ததனால் வசிட்டர் அருந்ததியையும், சோமசன்மன் மிக்க செல்வத்தையும், தன்மவீரியன் மேலான கதியையும், சத்தன் புத்திரபாக்கியத்தையும்பெற்றனர். இன்னும் இவ்விரதத்தை அநுட்டித்ததனால் தத்தம் மனோரத நிறைவேறப்பெற்றோர் பலர். விராடனென்னும் ஓர் பார்ப்பான் அபுத்திபூர்வமாக இதனை அநுட்டித்து மேலான சிவகதியை அடைந்தானென்றால் புத்திபூர்வமாக அநுட்டிப்பவர்க்கு எப்பேறும் எளிதிற் கைகூடுமல்லவா? ஆதலால் மகளே, நீயும் விதிப்படி இச்சோமவார விரதத்தை அநுட்டிப்பாயாயின் உனக்கு நேர்வதாகும் பேராபத்து நீங்கும். நெடுங்காலம் உன் கணவனுடன் நீ சகல போகங்களையும் அநுபவித்து வாழ்வாய்" என்று மயித்திரை சீமந்தினிக்குச் சோமவாரவிரத மகிமையைக் கூறுதலும், அவள் அதனை அன்புடன் கேட்டு மனமகிழ்ந்து அம்முனிவர் பத்தினியிடம் விடைபெற்றுக் கொண்டு தன் மாளிகைக்குச்சென்று அவ்விரதத்தை விதிப்படி அநுட்டித்து வரலாயினள்.

இஃது இங்ஙனமாக, நிடதநாட்டைப் பரிபாலித்த நளமகாராசனுடைய புத்திரன் இந்திரசேனன். அவனது புதல்வன் சந்திராங்கதன். அச்சந்திராங்கதனைச் சித்திரவருமன் தனது மகளாகிய சீமந்தினிக்கு மணம்முடித்துவைத்தான். சந்திராங்கதனும் சீமந்தினியும், விஷ்ணுவும் இலக்குமியும் போலவும், மதனும் ரதியும் போலவும், சகலவிதமான இன்பங்களையும் அநுபவித்து வந்தனர். இங்ஙனம் அநுபவித்துவருங் காலத்திலே ஒருநாள் சந்திராங்கதன் பொழுதுபோக்காகத் தனது தோழர் சிலருடன் ஒரு தோணிமீதேறி யமுனையாற்றிலே போகும்போது, கடுங்காற்று வீசியதினாலும், அதிகமாக அலை மோதியதினாலும், தோணி வேகமாய்ச் சென்றமையினாலும், அநேகர் அதில் ஏறியிருந்தமையினாலும், தோணி கவிழ ஐயோ! பரிதாபம்!! அத்தனை பேரும் ஆற்றில் அமிழ்ந்தினர். ஆற்றங்கரையில் நின்றோர் மருகனுந் தோழரும் ஆற்றில் மாண்டமையை மாமனாகிய சித்திரவருமனுக்குக் கூறினர். அவன் அதைக் கேட்டமாத்திரத்திற் பதைபதைத்து ஆற்றங்கரைக்கு ஓடிப்போய் "என் மருகனோ, மருகனோ" எனக் கதறினான். இதற்கிடையிற் சீமந்தினியும் இச்செய்தியைக் கேட்டாள்; ஏக்கமுற்றாள்; அடியற்ற மரம்போல் நிலத்தில் வீழ்ந்தாள்; மூர்ச்சையானாள்; சிறிது அறிவு வரப்பெற்றாள்; இடியேறுண்ட சர்ப்பம்போல் நிலத்திற் புரண்டுபுரண்டு புலம்புகின்றாள்:

"நீர்மலிந்த பண்ணை நிடதத்தார் மன்னவனே!
தார்மலிந்த மார்பா தமியே னுயிர்த்துணையே!
சீர்மலிந்தசொல்வாணர் தீபகலிக்கோடைதொடவ்
கார்மலிந்த வண்ணக் கனிதேயோ! கனிதேயோ!!

புன்னைச் செழுங்காவிற் பூவணையின் யாமுயன்ற
முன்னைப்பெருமபோகம் வேண்டாய்முனிந்ததா
லென்னைப்பிரிந்தாய்நீ யென்றாலும்யான் றமியே
னுன்னைப்பிரிந்தாவியுய்யேன் மற்றுய்யேனே!"

என்று பலவாறு புலம்பி மேலும் "நான் நெருப்பில் வீழ்ந்து இறந்தாலன்றி இத்துயரம் என்னைவிட்டு நீங்காது" எனக் கூறிச் சீமந்தினி அக்கினிப் பிரவேசஞ் செய்ய நிச்சயித்தாள். அதனை அறிந்த அவள் தோழியர் அரசனிடஞ் சொல்ல அரசன் பொட்டெனச் சென்று தன்மகளை எடுத்தணைத்து "என் செல்வமே, நீ அழவேண்டாம். இவ்வுலகத்தில் விதியை விலக்கினோர் ஒருவருமில்லை. 'ஆவது விதியெனில் அனைத்தும் ஆயிடும், போவது விதியெனில் அனைத்தும் போயிடும்.' என் மகளே, என்னாலும் உன்னாலும் எதொன்றும் முடியுமோ? முடியாது. ஆதலினன்றோ எல்லாம் ஈசன் செயல் என்றிருப்பர் பெரியோர். நெடுங்காலம் பெண்குழந்தை இல்லாமையினால் நானும் உன் தாயும் எத்தனையோ விரதங்களை யநுட்டித்தும், எத்தனையோ புண்ணிய தீர்த்தங்களில் ஆடியும், எத்தனையோ தானங்களைச் செய்தும், எத்தனையோ சிவஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தும், உன்னை அரிதிற் பெற்றோம்; அன்புடன் வளர்த்தோம்; அரசகுமாரனுக்கு மணம் முடித்துக்கொடுத்தோம்; உன் விதி இவ்வாறாயிற்று. இக்காலம் நீ அக்கினிப்பிரவேசஞ்செய்தால் நாமும் உயிர்வாழோம். ஆதலால் கண்மணி, நீ என் சொல்லைத் தட்டாது வைதவ்விய தருமத்தை அநுட்டித்துக்கொண்டு எங்களுடன் இரு" என்று பலவாறு தேறுதல் கூறினன். தன்பிதாவின் சொற்களால் தேறுதல் அடைந்த சீமந்தினி அன்றுதொடக்கம் வைதவ்விய நிலையை அநுசரித்துக்கொண்டு அநுதினமும் சிவபூசைசெய்து சோமவார விரதத்தையும் முன்போல அநுட்டித்துவந்தாள்.

(தொடரும்)

விளம்பரம்.

நேத்திரரோகிகட்கோரறிவித்தல்.

கண்களிலுண்டாகும் எவ்வித நோய்களுக்கும் சுத்த ஆயுள்வேதமுறைப்படி என்னால் செய்யப்பட்ட முதற்றரமான ஔஷதங்களைக்கொண்டு நேத்திர வைத்தியம் நடத்திவருகின்றேன். காலை 8 மணி முதல் 10மணிவரையும் எனது மருந்துசாலையில் நோயாளர் சிகிச்சைபெறலாம்.

நாயன்மார்கட்டு, S சதாசிவப்பிள்ளை.

JAFFNA CO OPERATIVE STORES LTD

யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்கம், கொம்பனிச் சட்டக்கோவைச்சட்டப்பிரகாரம் பதிவுசெய்யப்பட்டது.

ஒருபங்கு நூறு ரூபாயுள்ள ஆயிரம் பங்குகள் கொண்ட ஒரு லட்சம் ரூபா முதலுள்ளது.

சங்கத்தின் நோக்கம்: அரிசி, நெல், புடைவை, காய், தானிய முதலிய பல சாமான்களிலும் வியாபாரம் நடத்தல்.

1918-ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 26-ந் திகதிக்குச் சரியாய் நிகழும் காளயுக்தி வருஷம் ஆவணி மீ ௧௦௳ திங்கட்கிழமை காலமே சூரியோதயத்தில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே வியாபாரத் தொழில் தொடங்கி கிரமமாக நடைபெறுகின்றது. இன்னும் 500 பங்குகள் விற்பனவுக்கிருக்கின்றன. விரும்பியவர்கள் சங்கத்தின் லேககருக்கு மனு அனுப்பும்படி கேட்கப்படுகிறார்கள்.

M. Assipillai,
லேககர்,
J. C. S. Ltd.

விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான நிறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலா, மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாய்ப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரி தயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

இப்படிக்கு,
மு. நாகலிங்கம் அன் சன்ஸ்
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

முதிரை, வேம்பு, பாலை, சோமுந்திரி, பூவரசு,

மேற்சொல்லிய மரங்கள் பலவித நீளத்திலும் சுற்றளவிலும் கச்சேரிரோட்டில் தராக்குளத்திற்குச் சமீபமாயுள்ள ஓர் வளவிற் போடப்பட்டிருக்கின்றன.

வாங்க விரும்புவோர் வேண்டிய விபரங்களை யென்னிடம் அறிந்துகொள்ளலாம்.

Dr. A Chinnia,
Pettah Dispensary,
Jaffna.

விளம்பரம்.

எமது நீர்வேலிச் சைவவித்தியாசாலைக்கு இரண்டாந்தினசுத் தராதரபத்திரம் பெற்ற உபாத்தியாயர் ஒருவர் தேவை. சம்பளம் முதலிய விபரங்கள் என்னிடம் அறிந்துகொள்க.

இங்ஙனம்,
பண்டிற் நடராசபிள்ளை,
நீர்வேலி, யாழ்ப்பாணம்.

பனைமரங்கள்.

அழுக்கமாய் வெட்டப்பட்டனவும், சிறந்த வயிரமுள்ளனவுமாகிய பனைமரங்கள் யாழ்ப்பாணம் வை. ஆ. அவர்களுடைய வளவின் மேற்குப் பாகத்தில் விற்பனவுக்கிருக்கின்றன. விலை மிகவுஞ் சரசம். ஒருமுறை பரீட்சித்துப்பார்க்கவும்.

சிற்றம்பலம் சின்னத்தம்பி,
சண்டிருப்பாய்.

முதிரை, வேப்பு. பாலை, காட்டாமணக்கு.

மேற்சொல்லிய மரங்கள் பலவித நீளத்திலும் சுற்றளவிலும் நல்லூரில் நாயன் மார்க்கட்டுத் தெருவுக்குச் சமீபமாயுள்ள ஓர் வளவிற் போடப்பட்டிருக்கின்றன. வாங்க விரும்புவோர் வேண்டிய விபரங்களை யென்னிடம் அறிந்துகொள்ளலாம்.

A. N. Niles,
Zion Lodge
Nallore,
JAFFNA.

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கெர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்ப ஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௧.

2 தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இது அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூ. ௨, அணா ௮,

3. பிரமேக வியாதிக்குச் சந்த்ரச்செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௨.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின்எந்தஇடத்திலும் நடக்குந் தும்வாய்வுகளுக்கும் மற்றையெவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தே கண்கண்டஔஷதம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

௧௪ மாத்திரை புட்டி ஒன்று ரூ. ௧, அணா ௮.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். ௨௨ நாள் மருந்து ரூ. ௨

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, நித்திரைக்குறைவு, மலகட்டு இவைகளுக்குக் கண்கண்ட ஔடதம்.

௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூ. ௧, அணா ௮.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்.

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும். ௨௨ நாள் மருந்து ரூ. ௨.

8 மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாவிடைத் தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒருவாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப் போலிருந்து கறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ. 0-4-0 டஜன் 0 க்கு ரூ. 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகரோகத்தால் தேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் ௧ வேளையிற் குணமாக்கும்.

டப்பி ௧-க்கு அணா ௪. டஜன் ௧-க்கு ரூ. ௨, அ. ௮.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறாதீர்கள்! இதுசமையம்!! தவறாதீர்கள்!!!

உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(௧) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இதை பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்னவயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(௨) ௧. ஆயுட்பாகம், ௨. எத்தவிதத்திலும் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முன்னு பின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனு, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு நிலம் கிட்டுமோ, ௧௦. கடன் எப்போது நிவிர்த்தியாகும, ௧௧. வியவகாரம ஜெயமாகுமா, ௧௨. நினைத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ. ௧.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
௧௨ பாகம் சார்ஜ் ரூ. ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்தில் அனுப்புவோம.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினுற் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனாமாக அனுப்புவோம.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

☞ Printed and published by S. T. M. P
Sithambaranatha Chettiar, for the Proprieto at
the SaivaPrakasa Press, Jaffna.